பாப்பிநாய்க்கன்பட்டி கிராம ஊராட்சி தலைவரின் நடவடிக்கைகள்

முன்னிலை- திரு.C.ஜெயக்குமார்.

செயல் எண் 4 /2024/ஊராட்சி நிர்வாகம் நாள் - 29.02.2024

பொருள்:-

மனைப்பிரிவு அங்கிகாரம் - நாமக்கல் மாவட்டம் - புதுச்சத்திரம் வட்டாரம் - பாப்பிநாய்க்கன்பட்டி ஊராட்சி - சர்வே எண் 37/2A2A,37/3A-ல் 2.45 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது - இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை :-

1. அரசானை (நிலை) எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, ந.வ.4(3) துறை நாள் - 04.05.2017
2. அரசானை (நிலை) எண்.112, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, ந.வ.4(3) நாள் - 22.06.2017
3. அரசானை (நிலை) எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, ந.வ.4(2) நாள் - 04.06.2004.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடித இ.ந.க.எண். NKL/VGPKHHRQ/13994/2023/TCP நாமா 03.11.2023, SWP/DTCP/NAMAKKAL/ LAYOUT NO.389/2023 நாள் 30.11.2023.
5. தானப்பத்திர ஆவண எண்.4641/2023நாள் 02.11.2023.
6. தனியாரால் வழங்கப்பட்ட ரூ.20/- க்கான உறுதிமொழி பத்திரம்.
7. கூராய்வுக் கட்டணமாக பாப்பிநாய்க்கன்பட்டி ஊராட்சிக்கு செலுத்திய நாள் 29.02.2024 (இரசீது எண்:2023-2024/8/9/14/7/10)
8. நகர் ஊரமைப்புத் துறைக்கு உரிய கட்டணம் (3% Market value) செலுத்தப்பட்ட இரசிது எண்: 2023-2024/8/9/14/7/11 நாள்.29.02.2024 .

****

பார்வை (1) மற்றும் (2)ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நாமக்கல் மாவட்டம் புதுச்சத்திரம் வட்டாரம் பாப்பிநாய்க்கன்பட்டி ஊராட்சி/கிராமம் சர்வே எண்கள். 37/2A2A,37/3A- ல் 2.45 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைபடுத்தப்பட்டு சேலம் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ஒப்புதலின்படி மனைப்பிரிவிற்கு வரைபட எண்ணிட்டு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.389/2023 இல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு பார்வை 5 இல் காணும் தானப்பத்திரம் மூலம் சேந்தமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தின் மூலமாக பாப்பிநாய்க்கன்பட்டி ஊராட்சிக்கு தானமாக பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

பாப்பிநாய்க்கன்பட்டி கிராம ஊராட்சி மன்றத் தீர்மான எண். நாள் 28.02.2024 இன்படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற்றுகொள்ளபட்டதிற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையரை செய்வதற்கும் சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கும் உட்பிரிவு கட்டணத்தொகையினை செலுத்த மனுதாரரால் பார்வை 6 இல் கண்டுள்ளவாறு ரூ.20/- கான ஒப்புதல் பத்திரம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

பார்வை 7-ல் கண்டுள்ளவாறு கூராய்வு கட்டணம் 47 மனைகளுக்கு ரூ.47000/- (இரசீது எண்:2023-2024/8/9/14/7/10) நாள்:29.02.2024 மற்றும் மனை உட்பிரிவிற்கு 3% Market value கட்டணம் பார்வை 8-ல் கண்டுள்ளவாறு ரூ.91875/- (ரூபாய் தொண்ணுறு ஓராயிரத்து எட்நூறு எழுபத்து ஐந்து மட்டும்) (இரசிது எண்: 2023-2024/8/9/14/7/11, நாள்.29.02.2024) உரிய அரசுத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே நாமக்கல் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் மனைப்பரிவு வரைபட தொழில் நுட்ப அனுமதி SWP/DTCP/NAMAKKAL/LAYOUT N0.389/2023-ல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள், மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மேற்காணும் நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரம் இரத்து செய்திடவும் அதிகாரம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர், ஊராட்சி மன்றம்
பாப்பிநாய்க்கன்பட்டி கிராம ஊராட்சி
புதுச்சத்திரம் வட்டாரம்

தலைவர்
பாப்பிநாய்க்கன்பட்டி
ஊராட்சி

பெறுதல்

திரு.M.வனிதா,
கதவு எண் 5/3,
எட்டிகவுண்டன்புதூர்,
ஆவல்நாய்க்கன்பட்டி கிராமம்,
நாமக்கல் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

நகல்

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் (அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது)
2. சார்பதிவாளர் அலுவலகம் , சேந்தமங்கலம் , நாமக்கல் மாவட்டம்
   (அவர்களுக்கு அனுப்பப்படுகிறது)
3. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்). நாமக்கல்
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) புதுச்சத்திரம் வட்டாரம். (தகவலுக்காக)

Scanned with CamScanner